<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண். 112/2020 , வா.சா. 2. பாப்பாத்தியம்மாள்

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன பாப்பாத்தியம்மாள் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | பாப்பாத்தியம்மாள் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | பழனிச்சாமி | ஜாதி | – | |
| கிராமம் | – | ஊத்துக்குளி | வயது | – | |
| தாலூக்கா | – | பொள்ளாச்சி | தேதி | – | 19.01.2026 |

முதல் விசாரணை

நான் ஊத்துக்குளியில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ.8** | வா சா 2 ஆகிய எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டது |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) வழக்கு தாக்கல் செய்துள்ள மகாலிங்கம் எனது அண்ணனா என்றால் இல்லை. எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எனது பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் மகாலிங்கம் சொல்லி எழுதப்பட்டது ஆகும். தாவா சொத்தில் தங்கவேல் தான் குடியிருந்து வருகிறார்

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

என்றால் சரிதான். மகாலிங்கம் எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வீட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மகாலிங்கம் காலியிடத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல,.

2) ஆதியில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் கூட்டுப்பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தங்கவேலுக்கு வந்த பட்டாவின் அடிப்படையில் அவர் தனியாக வீடு கட்டினார் என்றால் மகாலிங்கம் கட்டி கொடுத்து தான் அவர் அதில் குடியிருந்து வருகிறார். மின் கட்டணம், வீட்டுவரி, குடிநீர்வரி ஆகியவை தங்கவேல் பெயரில் தான் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜமீன் ஊத்துக்குளி கிராமம் பத்திரசாமி மகன் ஆறுச்சாமி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகாலிங்கத்திற்கு பட்டாவின்அடிப்படையில் வந்த சொத்தை ஆறுச்சாமி பெயருக்கு வாதி கிரயம் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வகையில் மகாலிங்கத்திற்கு சொத்து பாத்தியம் எதுவும் கிடையாது என்றால் அது பூர்வீக சொத்து ஆகும்.

3) பூர்வீக சொத்து என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் மகாலிங்கத்தின் அப்பா காலத்தில் இருந்தே அந்த வீடு இருப்பது எனக்கு தெரியும் என்ன பத்திரம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இது அரசாங்க சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு எவ்வித ஆவணங்களும் கிடையாது என்றால் பூர்வீக சொத்து தான். எனது முதல் விசாரணையில் பத்தி 3 ல் நத்தம் நிலவரித்திட்டத்தில் தரப்பட்ட வீட்டு மனை பூமி என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். தங்கவேலின் பட்டாப்படி அவர் வீடு கட்டிவிட்டார் என்றும் மகாலிங்கத்திற்கு பட்டாப்படி வந்த சொத்தை 3 ம் நபருக்கு கிரயம்

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கொடுத்துவிட்டார் என்றும் தங்கவேலின் சொத்திற்கு ஆசைப்பட்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கூறியுள்ளது போல் ஒரு சொத்து விவரமே இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/—(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி